செய்தி வெளியீடு எண்:554 நாள் :12.10.2013

## செய்தி வெளியீடு

நிலையான பொருளாதார வளர்ச்சிக்கும் மற்றும் நிகரான மேம்பாட்டிற்கும், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. குறைந்த மூலதனத்தில் நிலைத்த வேலைவாய்ப்பு அளிப்பது இப்பிரிவின் மேன்மையாகும். தொழில் முனைவோர் மேம்பாடு அடைவதற்கு நாற்றங்காலாக விளங்குவது குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் துறையேயாகும். எனவே குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களை தொடங்க முனையும் தொழில் முனைவோரை ஊக்குவிக்கும் வகையில் பல்வேறு சலுகைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு அளித்து வருகிறது.

படித்த இளைஞர்களை முதல் தலைமுறை தொழில் முனைவோராக மாற்ற உதவும் நோக்குடன் ''புதிய தொழில் முனைவோர், தொழில் நிறுவன வளர்ச்சித் திட்டம்'' என்ற புதிய திட்டத்தை 2012-13 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஏற்கெனவே உத்தரவிட்டுள்ளார்கள். இதன்படி, படித்த இளைஞர்களுக்கு தொழில் முனைவோர் பயிற்சி அளிக்கப்பட்டு, தொழில் தொடங்க திட்டங்கள் தயாரிக்கப்பட்டு, நிதிநிறுவனங்களில் நிதியுதவி பெற உதவுவதுடன், பெரும் தொழில் நிறுவனங்களுடன் அவர்களுக்கு வணிகத் தொடர்பும் அமைத்துத் தர நடவடிக்கை எடுத்தல்; வங்கிகள், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் ஆகியவற்றின் மூலம் 25 லட்சம் ரூபாய்க்கு மிகாத 25 விழுக்காடு முதலீட்டு மானியமும், மூன்று விழுக்காடு வட்டி குறைப்புடன் கூடிய கடனுதவி அளித்தல்; மின்வெட்டிலிருந்து தொழிற் உற்பத்தி பாதிக்கா வண்ணம், 320 KVA வரை திறன் கொண்ட மின்னாக்கிகளை நிறுவுவதற்கு மானிய உச்சவரம்பினை 5 லட்சம் ரூபாயாக உயர்த்துதல்; குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களின் உற்பத்தி மற்றும் போட்டித் திறனை அதிகரிக்கும் வண்ணம், மத்திய அரசின் பங்களிப்புடன் செயல்பட்டு வரும் சிறு தொழில் நிறுவனங்கள் குழும மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்துதல்; சிறுதொழில் முனைவோர்களுக்கு வளர்ந்து வரும் தொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்ப பயிற்சி அளிக்கப்பட வேண்டும் என்பதை கருத்தில் கொண்டு, தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனத்தில் பயிற்சி வளாகம் ஒன்றை அமைத்திடல் போன்ற எண்ணற்ற திட்டங்களை சிறு, குறு, நடுத்தரத் தொழில்கள் வளர்ச்சிக்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது.

தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் தமிழ்நாட்டில் உள்ள குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் வளர்ச்சியை முக்கிய நோக்கமாக கொண்டு பல்வேறு இடங்களில் தொழிற்பேட்டைகளை உருவாக்கி வருகின்றது. தற்பொழுது தமிழ்நாட்டில் மொத்தம் 94 தொழிற்பேட்டைகள் இந்நிறுவனத்தால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. மேலும் இந்த நிறுவனம் 26 கோடியே 68 லட்சம் ரூபாய் செலவில் நான்கு புதிய தொழிற்பேட்டைகளை உருவாக்கவும், தற்பொழுதுள்ள இரண்டு தொழிற்பேட்டைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை 6 கோடியே 32 லட்சம் ரூபாய் செலவில் உயர்த்தவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஏற்கெனவே ஒப்புதல் அளித்துள்ளார்கள்.

இப்பணிகளை நிறைவேற்றுவதற்கு ஏற்ற வகையில் தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் நிதி ஆதாரத்தை பெருக்க வேண்டியது மிகவும் அவசியமாகும். உறுதியான பங்கு மூலதன அடித்தளம் இருந்தால்தான், இந்நிறுவனம், வங்கிகள் மற்றும் நிதிநிறுவனங்களை அணுகி கடன் வசதி பெற இயலும். எனவே தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனத்தின் நிதி ஆதாரத்தை மேலும் பலப்படுத்தி, சிறு தொழில்களின் வளர்ச்சிகளை ஊக்குவிக்கும் வகையில் அந்நிறுவனத்திற்கு கூடுதலாக 16 கோடி ரூபாய் அரசின் பங்கு மூலதனமாக வழங்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இதன் மூலம் ஏற்கெனவே 8 கோடியே 70 லட்சம் ரூபாய் என இருந்த இந்த நிறுவனத்தின் பங்கு மூலதனம் 24 கோடியே 70 லட்சம் ரூபாயாக உயரும்.

தமிழகத்தில் சென்னை, மதுரை, கோவை, சேலம் மற்றும் தூத்துக்குடி ஆகிய 5 இடங்களில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு உதவிடும் வகையில், ரசாயனம், உலோகவியல், மற்றும் இதர மூலப்பொருட்களை பரிசோதனை செய்ய நவீன உபகரணங்களுடன் கூடிய பரிசோதனைக் கூடங்கள் இயங்கி வருகின்றன.

இந்த இடங்களில் உள்ள ஆய்வுக் கூடங்கள் 40 வருடங்களுக்கு முன்னர் கட்டடப்பட்ட பழமையான கட்டடங்களில் இயங்கி வருகின்றன. பழமையான இக்கட்டடங்களை புனரமைக்கவும், பரிசோதனைக் கூடங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காகவும் 2 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

அரசின் இந்த நடவடிக்கைகள், சிறு குறு மற்றும் நடுத்தரத் தொழில்களின் வளர்ச்சிக்கு பெரும் உதவிகரமாக அமையும்.

*******

வெளியீடு:- இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9
நாள்:- 12.10.2013.